**ஆணமடுவ பிரதேச சபை**

**புத்தளம் மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆணமடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தொகை ரூபா 114,297 பெறுமதியான இருப்பு, நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான வைப்புக்கள் ரூபா 14,750 இனால் குறைவாக கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,705,163 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 222,331 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் என்பன ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 1,929,494 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆண்டு தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடை ரூபா 68,020 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கடன்கொடுத்தோரின் கீழும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆண்டிற்கான சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக ரூபா 49,500 இற்கான கடன்கொடுத்தோரின் கீழ் பிழையான முறையில் முன்கொண்டு வரப்பட்டிருத்தலை மீளாய்வாண்டின் போது அதனை சரி செய்திருக்கவில்லை. அத்துடன் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய ரூபா 45,000 தொகையினை இரண்டு முறை கணக்கீடு செய்திருந்தமையால் கடன்கொடுத்தோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஏனைய வருமான நிலுவையின் பெறுமதி ரூபா 1,023,280 தொகை எனினும், பட்டோலைகளின் பிரகாரம் அவை ரூபா 742,058 என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 281,222 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆண்டு இறுதியில் உள்ளவாறு ஏனைய வருமான நிலுவை ரூபா 1,023,280 ஆகக் காணப்பட்டதுடன், பட்டோலைகளின் பிரகாரம் அம் மீதி ரூபா 742,058 என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 281,222 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 30,605,563 இற்கான பெறவேண்டிய மற்றும் ரூபா 20,632,231 இற்கான செலுத்த வேண்டிய மீதிகள் காணப்பட்டதுடன், அவற்றில் முறையே 03 ஆண்டு மற்றும் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 4,587,739 இற்கான நிலுவை வருமானம் மற்றும் ரூபா 1,083,892 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளும் அடங்கியிருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------------

போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,628,462 இற்கான சொத்துக்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க சபை சட்டத்தின் பிரிவுகள் 129(2)(அ) மற்றும் (ஊ) இன் பிரகாரம் சபைக்குக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம் மற்றும் வாடகை போன்ற வருமானங்களை முறைப்படி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் வீத வரி செலுத்தத் தவறியவர்களுடைய அசையும் சொத்துக்களை தடைசெய்து நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 5(7) மற்றும் 65 பிரகாரம் முறையே நிதி மற்றும் களஞ்சிய விடயங்கள் தொடர்பாக போதியளவு அகக் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கும், கொடுப்பனவு மேற்கொள்ளத் தவறும் நபர்களின் பெயர் பட்டியல் ஒன்று தயாரித்து செயலாளருக்குச் சமர்ப்பிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 11,583,021 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,288,151 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 10,168,738 உம் மற்றும் ரூபா 8,851,306 உம் மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 15,380,479 உம் மற்றும் ரூபா 17,591,515 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் மீளாய்வாண்டிற்கான ரூபா 6,371,280 இற்கான மிகையொன்றும் மற்றும் முன்னைய ஆண்டின் ரூபா 4,452,059 இற்கான பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 10,823,339 இற்கான முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முரண் |
|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி | 2,210 | 2,042 | 168 |
| (ii) | குத்தகை, வாடகை | 12,053 | 9,109 | 2,944 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,138 | 708 | 430 |

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை அதனது மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது முறையே நூற்றிற்கு 24.43 உம் மற்றும் நூற்றிற்கு 37.79 உம் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2.2 முத்திரைக் கட்டணம்

சிலாபம், நிக்கவெரட்டிய, புத்தளம் ஆகிய மேலதிக பதிவாளர் அலுவலகங்களில் இருந்து மூன்றில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணத்தை கணித்து கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 5,000,000 தொகையினை ஆண்டிற்கான வருமானம் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 597,668 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டி மற்றும் பெறுமதி கணிக்கப்படாத மினி குபோடா டிரக்டர் என்பன நீண்ட காலமாக பாவணையில் இருந்து அகற்றப்பட்டு காணப்பட்டது.

3.2 அகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு